REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

புு-25 | கும்பகோணம் விக்ரம- ௵ கார்த்திகை ௴ 6௳ 1940-௵ நவம்பர்-௴ 21௳ | ஸ-45

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா)

ஸிந்து துருக்கருக்கு செய்க !! மஹமதிய கல்வி விசாரண ஸபை தலைவர் எந்த மதமும் இதர மதத்தை அவமதிக்கவோ மற்ற மதத்தினரை வெறுக்கவோ சொல்லவில்லை என்று உபன்யஸிக்கிறார். ஸிந்துமிலேச்சர் ஹிந்துக்களைக் கொல்லாதிருந்தால் போதும்!

தக்கமருந்து ஆங்கில கல்வியே!! தம் மதத்தில் மிக மூர்க்கத்தனமான பிடிவாதமும் பிறரை மிருகமாக எண்ணும் குணமும் அகல ஒவ்வோர் மிலேச்சரும் S. S. L. C. [illegible] படுத்தினால் போதும்! மிக்க ஸாதுக [illegible]

இது கௌரங்கர் வழி!! கௌரங்கா எனும் வட நாட்டு மதாசார்யர், தவநிலையிலிருந்து கங்கையில் விழ அவரைத் தொட்ட சம்படவர் கிருஷ்ணராமா என பித்தரைப் போல் ஆட அவர் பக்தர்கள் இவரிடம் முறையிட புரோஹிதான்னத்தை அவர்களுக்கு கொடுக்கச் சொன்னாராம்!! புரோஹிதர்மன்னிக்கவும்.

இன்னும் பூபாரம்? துர்யோதனாதிகள் மூலம் பூபாரம் குறைந்தது போல் ஹிட்லர் மூலம் அநேகமாகக் குறைந்ததென்றே கூறலாம்! போதாக்குறைக்கு ருமேனிய பூகம்பம் பல உயிர்களைக் கொள்ளை கொண்டது! கணக்கு அவனுக்கன்றோ தெரியும்!

தன்னையறியாத நல்லுபதேசம்! மாணவர் தேசிய விஷயத்திற்காக வேலை நிறுத்தம் செய்தால் தக்கசிக்ஷை கிடைக்குமென உத்திரவு வந்தவுடன் அது ஓய்ந்தது. காந்திஜி சமயோசிதமாக வேலை நிறுத்தம் வேண்டாமென கூறுகிறார். அவர் சீடரும் அப்படி உபதேசிப்பது நல்ல காலமே!!

ஆனால் நேரில் உபதேசமாம்!! மாணவர் எப்படி தனக்கு உதவலாமென்பதை நேரில் உபதேசிப்பதாக அழைக்க மாணவர் பிரதிநிதியும் அங்கு போயிருக்கிறார். சர்க்காரோடு நின்றால் பாக்யமே!

பழைய பல்லவி தான்!! கலி வேகம் ஏற ஏற ஸ்திரீகள் கூட்டம் என்னென்ன விசித்ரமான தீர்மானம் செய்யுமோ என பயந்தோம். சென்னை ஸ்த்ரீ ஸபை புதிய துர்மார்க்கத்திலிறங்காது பழைய வசை புராணத்துடன் நின்றது பாக்யமே!

ஸாத்விகர்களா!! சென்னையிலேயே பல உத்தமிகள் பண்டய ஸதாசாரத்தை விடாமல் துலாஸ்நாநம், துலா புராணம் முதலியவைகளைப் பலவிடங்களில் நடத்தினர். நமது சங்கர மடத்திலும் பெண்கள் சிரத்தையாலது மிக சிறப்பாக நடந்தது!

விழுப்புரம்

[illegible] வேதபாடசாலை உபாத்யாயர் [illegible] ராயண சாஸ்திரிகளுக்கு [illegible] ராவ [illegible] டசய்யர் அவர்கள் எழுதி [illegible] ல் டிஸம்பர் 8—10—11 [illegible] ல் திருவண்ணாமலையில் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் விசேஷ மஹாநாடு நடத்தப் போவதாயும் அந்த ஸமயம் விழுப்புரம் வந்து பாடசாலையையும் பார்த்துப் போவதாயும் குறிப்பிட்டிருக்கிறார்.

திருநெல்வேலி அட்வகேட் R. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களும் பாடசாலையை ஸிலாகித்து லெட்டர் எழுதியிருக்கிறார்.

ந. நி.

ஸந்தேஹம்

ஆஹிதாக்நிகள் கிரமஸன்யாஸம் செய்து கொள்ள வைத்யநாத தீக்ஷிதீயம் விச்வேச்வர ஸ்மிருதி இதில் காணப்படுவதைத் தவிர வேறு ப்ரயோக நூலிருக்கிறதா? இருந்தால் எங்கு கிடைக்கும்.

இஷ்டி செய்ய முடியாத பக்ஷத்தில் பூர்ணாஹுதிசெய்யும்படி கூறியுள்ளது. அதற்கு இஷ்டி தேவதையா இஷ்ட தேவதையா மஹாவ் யாஹிருதியா மந்தரம்?

ஸ்திரீகள் பூஜை செய்யும் போது மணி அடிக்கக் கூடாதென்பதற்கு பிரமாண வசனங்கள் எவை? பண்டிதர்கள் பத்ரிகை மூலம் பதிலளிக்க வேண்டுகிறேன்.

ஸந்தேஹி

ஸ்ரீ வைகானஸ யுவர்களின் எழுச்சி.

சென்ற அர்ப்பசி௴ 28தேதி(13-11-40) புதன்கிழமை, மாலை 3 மணிக்கு மாம்பலம் ஸ்ரீ கோதண்ட ராமஸ்வாமி சன்னதியில் நடந்த திருபவித்திரோத்ஸவ 4வது தினத்தன்று, வந்திருந்த வைகானஸ சுவாமிகள் ஆதரவில் கூடி, மாம்பலம் ஸன்னதி அர்சகரான ஸ்ரீமான் உ. வே. வெங்கடரங்க பட்டாசாரியாரால் ஸ்ரீ வைகானஸ யுவர் அபிவிர்த்தி சபை திறந்து வைக்கப்பட்டு சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

வைகானஸ பட்டர் சா[illegible]கள் கோவில் [illegible] பாவது பதமா[illegible] மாக அணிந்து கொள்ள வேணுமென்றும் வைகானஸர்களின் கல்வி அபிவிருத்திக்காக வஸதி செய்ய வேண்டுமென்றும், அகில பாரதிய வைகானஸ ஸபையை சீக்கிரத்தில் நடத்த வேணுமென்றும், தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. ஸ்ரீநிவாஸபட்டாசாரியரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு ஸபை கலைந்தது.

கிருஷ்ணபட்டா சாரியார்

பண்டிதர்களுக்கோர் விக்ஞாபநம்

நமது பண்டய நூல்களைப் பல தேசத்தவர் கொள்ளை கொண்டு சென்றனர், சிலவை நம் நாட்டு புத்தகசாலைகளுக்குச் சென்றன. இன்னும் எஞ்சியுள்ள அச்சில் வராத நூல்கள் எந்த விஷயமாயினும் சரி விஷய மறியாதவர்களிடம் பரணைமீது ஓலைச்சுவடி ரூபமாக இருப்பவைகளைத் தேடி இன்னின்ன விடத்தில் இது இது இருக்கிறதென்று நமது பத்ரிகை மூலம் தெரிவித்தால் தக்கவர்களைக் கொண்டு அச்சிட முயற்சிக்கலாம். மற்ற புத்தகசாலை போல் நமக்கு அலைந்துதிரிந்து நூல்களைத் தேடிப் பிடிக்க பண்டிதர் செலவை ஏற்கஎவரும் முன்வரார். ஆங்காங்கு அருகிலுள்ள விடத்தில் சென்று பண்டிதர் அந்த கைங்கரியம் செய்யலாம். ஸ்ரீமத் ஆலங்குடி ஸ்வாமிகள் புத்தக ஜாப்தாவை வைத்துள்ளோர் வெளியிடல் நலம்.

ஓர் புராணி

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம்.

மதுரை டவுன்.

வருஷாந்தர யாதாஸ்து

இச்சங்கமானது 1 32-ம் வருஷத்தில் நம்முடைய தலைவர் ஸ்ரீமான் ராவ்சாகிப் என். நடேசய்யர் அவர்களால் இந்த நகரில் ஸ்தாபிக்கப்பெற்றது. இச்சங்கத்தில் மதுரையிலுள்ள அநேக ஆஸதிகர்கள் அங்கத்தினர்களாக இருந்து வருகிறார்கள் இந்த நகரிலுள்ள எல்லா ஆஸ்திகர்களும் ஹிந்து மத விஷயமான விசேஷக் கூட்டங்களிலும் இச்சங்க வருஷோத்ஸவங்களிலும் தங்கள் பூர்ண ஆதரவைக்கொடுத்து வருகிறார்கள்.

சென்ற வருஷங்களில் இச்சங்கத்தில் 151 அங்கத்தினர்கள் இருந்தார்கள். இவ்வருஷத்திலோ 7111 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்- அவர்களில் ஒருவர் ராஜீநாமா செய்துவிட்டார்.

மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் கோவிலில் தீண்டாதார் பிரவேசம் எவ்விதம் நடந்தது என்பதுபற்றி இதில் அதிகமாகச் சொல்லத்தேவையில்லை. 8—7—39-௳ முதல் நாளது தேதி வரை ஆஸ்திகர்களின் கூட்டங்கள், ஊர்வலங்கள், பஜனை கோஷ்டிகள் தெருக்கூட்டங்கள், உபவாஸ நியமங்கள், வந்தனை வழிபாடுகள், அபிஷேகங்கள், அர்ச்சனைகள், தினந்தோறும் புராண படனங்கள், சம்மேளனங்கள் முதலியவைகள் ஏற்பட்டதிலிருந்தும் அவைகளில் பல்லாயிரக்கணக்காக இந்நகர் ஆஸ்திகர்கள் கலந்துகொண்டதிலிருந்தும் இந்த நகரில் ஆலயப்பிர[illegible] சட்டத்துக்கு எவ்வளவு [illegible] கும்.

சம்மேளனங்கள்

இவ்வருஷத்தில் இச்சங்கத்தின் ஆதரவில் 2 சம்மேளனங்கள் நடைபெற்றன. 1939ம் வருஷம் ஸெப்டம்பர்௴ த்தில் கூடிய சம்மேளனம் பூர்த்தியடையவில்லை ஆனால் 1940 ம் வருஷம் ஸெப்டம்பர்௴ 22௳யில் மதராஸ் சேட் புருஷோத்தமதாஸ் கோகுல்தாஸ் அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாக நடந்தது.

சென்ற வருஷத்தில் மொத்தம் 18 நிர்வாக சபை கூட்டம் நடைபெற்றிருக்கின்றன. ஒவ்வொரு கூட்டத்திற்கும் 7 அல்லது 8 நிர்வாக சபை அங்கத்தினர்கள் வந்திருக்கிறார்கள். முக்கியமாக நாம் ஆலயப்பிரவேச சட்டம் ரத்தாகும் நிமித்தம் எடுத்துக்கொள்ளவேண்டிய திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டு நிறைவேறி இருக்கின்றன.

இவ்வருஷத்தின் சந்தா நன்கொடை இவைகளில் வரவு மொத்தம் ரூ 2365–7–0 சங்கத்தின் சென்றவருஷம் மொத்த செலவு ரூ. 1812—12—7. பாக்கி ரூ. 552-10-5 ம் நாளது தேதியில் பொக்கிஷதார் வசமிருக்கிறது. கணக்குகள் பரிசீலனைசெய்யப்பட்டு ஆடிட்டர் ரிப்போர்ட்டும், வரவுசெலவு காட்டக்கூடிய ஜாப்தாவும் இந்த ரிப்போர்ட்டில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

நம் தலைவரின் ஊக்கத்தின் பேரிலும், உதவியின் பேரிலும், நமது டவுன் சங்க அத்யக்ஷகர்களும் மற்றும்சில அங்கத்தினர்களும் வாலிப யுவக் சங்க மெம்பர்களில் சிலரும் பாலிகா சங்க மெம்பர்களில் சிலரும் சேர்த்து சோழநாடு, செட்டிநாடு, பாண்டிய நாடு முதலிய பல பிரதேசங்களிலும் ஊர் ஊராய் பிரசாரம் செய்ததின் மூலம் சுமார் 80 கிளைச் சங்கங்கள் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கின்றன.

இச்சங்கத்தின் ஸ்திரீ அங்கத்தினர்கள் மதுரை ஆஸ்திக ஹிந்து மாதர்கள் சங்கம் என்ற பெயருடன் நமது சங்கத்தின் பிரதான கிளைச்சங்கமாயிருந்து நம் சங்கத்திற்குச் செய்து கொண்டிருக்கும் த்யாகத்திற்கும், அவர்களும் பிரசாரத்தில் ஈடுபட்டு, ஆஸ்திக தர்மத்துக்குச் செய்துவரும் பேருதவிக்கும் நாம் எப்பொழுதும் நன்றி பாராட்டவேண்டும்.

தீண்டாதார்கள் ஆலயத்துக்குள் சென்றதால் சாந்நித்யம் விலகிவிட்டது. ஆஸ்திகர்கள் எவரும் கோவிலுக்குப் போவதில்லை. அப்படிச் செல்லாமல் ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஆஸ்திகர்களின் ஆத்மலாபத்துக்காக நம் தலைவரவர்கள் ஸநாதன தர்ம வித்யாலயத்துக்கு அர்ப்பணம் செய்திருக்கும் தன் பங்காள முன்னிடத்தில் ஏற்கனவே ஸ்தாபித்திருக்கும் விக்னேச்வரர், சுப்ரமணியர் ஸந்நிதியில் பாலமீனாம்பிகை பிரதிஷ்டை செய்து ஆலயம் ஸ்தாபிக்கப் பெற்று, நித்ய பூஜை விசேஷ உற்சவம், மஹாபிஷேகம் அர்ச்சனை நடந்துவருகிறது, சென்ற வருஷத்திலும், சமீபத்திலும், நவராத்திரி உற்சவம் வேதபாராயணங்கள், அபிஷேகங்கள், ஸஹஸ்ரநாமார்ச்சனை சங்கீத கச்சேரிகளும், கதா காலக்ஷேபங்களும் விமரிசையாயும் நடந்தேறின.

சென்னை மாகாண வர்ணாச்ரம சுயராஜ்ய ஸங்க மஹாநா[illegible]

டிஸம்பர்-௴ [illegible]

[illegible] ரங்கள் [illegible]

வரவேற்புக்கழகத்தலை[illegible] மலை தேவஸ்தான தர்மக[illegible] க. வீ. சொ. வீ. அழகப்பசெட்டியா[illegible] விப்பது:—

ஸ்ரீ அருணாசலேச்வரர் திருவருளை முற்கொண்டு திருகார்த்திகைத்தீப மஹோத்ஸவ வைபத்தில் விக்கிரம-௵ கார்த்திகை மாதம் 24, 25, 26, (டிஸம்பர்௴ 9, 10, 11,) திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் ஸ்ரீ அருணாசலேஸ்வரர் சத்திவிலாஸ் மண்டபத்தில் ஷை மகாநாடு சென்னை ஸ்ரீமான் சேட் புருஷோத்தமதாஸ் கோகுல்தாஸ் அவர்கள் தலைமையில் நடைபெறும். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் சென்னை திவான்பஹதூர் ஸ்ரீமான் வி. மாசிலாமணி பிள்ளை அவர்கள் மகாநாட்டை ஆரம்பித்து வைப்பார்கள். அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தலைவர் மதுரை ராவ்சாகிப் ஸ்ரீமான் என். நடேசய்யரவர்கள் பி, ஏ., பி. எல்., உபக்கிரம பாஷணம் செய்வார்கள், தேவகோட்டை சிவநேசச் செல்வர் ஸ்ரீமான் கரு. ஒ. சொர்ணநாதன் செட்டியாரவர்கள் கொடியேற்றுவிப்பார்கள். தார்மிகஹிந்துக்களவர்களனைவரும் விஜயம செய்து மஹாநாட்டைச் சிறப்பித்து, நமது சங்கத்தை பல வழிகளிலும், பலபடுத்தக் கோருகிறேன், பிரதிநிதிகளாய் வருவோர் தங்கள் விலாசங்களையும், அனுப்பும் தீர்மானங்களையும், அடியில் கண்ட விலாசத்திற்கு 1940-௵ நவம்பர்-௴ 30-௳க்குள் அனுப்பக்கோருகிறேன், பிரதிநிதிகளுக்கு ஜாகை முதலான வசதி அளிக்கப்பெறும்.

க. வீ. சொ. வீ. அழகப்பச்செட்டியார்
கோட்டையூர் இராமநாதபுரம் ஜில்லா,

ஏகாதசி உபன்யாஸம்.

கும்பகோணம்

சோலையப்ப முதலியார் அக்கிரகாரம் ஸ்ரீ விசாலாக்ஷி அம்மன் சன்னதியில் ஆசார்யாளின் ஆக்ஞைப்படி 10—11—40-௳ ஏகாதசியன்று பிர்மஸ்ரீ பாகவதர் அம்பி சாஸ்திரிகள் அவர்கள் பிரகலாத சரித்திரம் வெகுபக்தியாக சொன்னார்கள். சுமார் 100 பேர்கள் வரையில் வந்து கதாசிரவணம். செய்தார்கள்

வருகிற 25—11—40 திங்கள்கிழமை 4-மணிக்கு ஏகாதசியன்று ஆக்ஞைப்பிரகாரம் ஷை இடத்தில் நமது நகர் வாணாதுறை பிர்மஸ்ரீ பாலகிருஷ்ண தீக்ஷிதர் அவர்கள் பாதிவிர்த்தியம் பாதிவிரதாதர்மம் என்பதைப்பற்றி உபந்யாஸிப்பர்கள் யாவரும் விஜயமாகும்படி கோருகிறேன்.

எஸ். சுப்பிரமணிய அய்யர்,
ஸ்ரீ மடம் முத்ராதிகாரி

திருத்தம்

சென்ற வார ஆர்யதர்மம் 5-வது பக்கத்தில் பிரசுரமான "ஸ்ரீ ராமாயணத்தை எப்படி அறியவேண்டும்" என்ற வியாஸத்தில் முதல் பாராவில் "வித்யாஸங்கள்" என்பதை "வியாஸங்கள்" என்றும், 2-வது காலம் கடைசி வரியில் "பிரவர்த்திக்கிறது" என்பதை "பிரவர்த்திக்காது" என்றும் வாசிக்கவும்.

விமான நஷ்டம்

அக்டோபரிலும் நவம்பரிலும்

லண்டன் (தந்தி)

அக்டோபர் மாதத்தில் ப்ரிட்டிஷ் தீவுகள் மீதும் [illegible] 2[illegible]1 [illegible]னங்கள் நாசஞ்செய்யப்பட்டன. ஆகவே யுத்தம் ஆரம்பித்தது முதல் சுட்டு வீழ்த்தப்பட்டவைகளின் மொத்தம் 2,765 ஆகிறது இதே மாதத்தில் 119 ப்ரிட்டிஷ் சண்டை விமானங்கள் நஷ்டமாகி யிருக்கின்றன. இவைகளிலிருந்து 62 விமானங்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

இந்த மாதத்தில் பிரிட்டிஷாருக்கும் ஜெர்மனியருக்கும் இந்த நாட்டின் மீதும் இதை சுற்றியும் நடந்த போராட்டத்தில் ஏற்பட்ட விமான நஷ்டத்தின் விபரம் வருமாறு:—

		ஜெர்மன்	ப்ரிட்டிஷ்	கா. வி.
நவம்பர்	1௳	18	7	2
ஷை	2௳	10		
ஷை	3௳	1	1	
ஷை	4௳			
ஷை	5௳	7	5	2
ஷை	6௳	6	4	1
ஷை	7௳	7	5	5
ஷை	8௳	20	6	2
மொத்தம்		69	28	12
அக்டோபரில்		241	119	62

ஸ்ரீ V. ஸோமதேவ சர்மா பிரசுரம்

	ரூ.	அ.	ப
சங்கரோபதேசரத்னம்.	1	8	0
பத்ம புராணம்.	0	12	0
மார்க்கண்டேய புராணம்.	0	6	0
வாமன புராணம்.	0	6	0
வைகுண்ட ஏகாதசி.	0	0	6
ஸ்ரீ ஸ்துதிகுஸுமாஞ்சலி	0	1	0
ப்ரஹ்மவைவர்த்த புராணம்	0	12	0
கூர்ம புராணம்.	0	6	0
ப்ரஹ்ம புராணம்	0	12	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.

மதிப்புரை

ஸ்ரீ கிருஷ்ணசரிதம்

(யோகசாஸ்திர தத்வத்தை அநுஸரித்து எழுதப்பட்டது)

கும்பகோணவாஸியும் ரிடயர்டு ஸப் மாஜிஸ்ட்ரேட்டும் ஆஸ்திக சிரேஷ்டருமான ஸ்ரீமான் அய்யாத்துரையய்யர் யோக சாஸ்திர தத்வப்படி ஸ்ரீராம, கிருஷ்ணுதி சரிதங்களை விமர்சித்து ஏற்கனவே பலபுஸ்தகங்களை வெளியிட்டிருப்பதை பலர் அறிந்திருப்பார்கள். ஸ்ரீராமாயணம் கீதை முதலியவைகளை மேற்கண்டபடி அவர்கள் எழுதி வெளியிட்டிருப்பதைப் பல அறிவாளிகள் மெச்சியிருக்கிறுர். மதாசாரியர்களும் ஸ்ரீமான் அய்யரவர்களுடைய விமர்சனங்கள் நமது சாஸ்திர முறைக்கு ஒத்ததாக இருப்பதாகவே அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறுர்கள்.

இப்போது ஸ்ரீமான் அய்யரவர்கள் ஸ்ரீ கிருஷ்ண சரிதத்தை, யோக சாஸ்திரப்படி தத்வரீதியில் ஆராய்ச்சிசெய்து தமிழில்ஷை புஸ்தகத்தை வெளியிட்டிருக்கிறுர்கள். நன்கு ஊன்றி கவனித்தால் ஸ்ரீகிருஷ்ண சரித்ரமானது ஒரு யோகியின் சரித்திரமாக காணப்படுவதாக அவர் ஸமர்த்திக்கிறுர் அதற்கு ஆதாரமாக அவர் காட்டியுள்ளவைகளும் யாவராலும் அங்கீகரிக்கக்கூடியவைகளாகவே இருக்கின்றன.

கோவர்த்தன கிரியைக்குடையாகப் பிடிப்பது, காலிங்க நர்த்தனம், ராஸக்ரீடை, கம்ஸவதம், ஜராஸந்தயுத்தம், ஸ்ரீகிருஷ்[illegible] 16 ஆயிரம் கோபிகைகளை மண[illegible] போன்ற பற்பல சரித்திரங்களின் தத்[illegible]த்தை யோக ரீதியில் நன்றாக எடுத்து [illegible]த்துள்ளார். ஸ்ரீகிருஷ்ண சரித்திரத்[illegible] பலர் பலவாறு குறை சொல்லுவது வ[illegible]கம். இதர மதஸ்தர்கள் உண்மையறி[illegible] மேலழிந்த வாரியாக தூஷிப்பது மு[illegible] ஸ்ரீகிருஷ்ணனின் நடத்தைகளை தத்வரீ[illegible] ஆராய்ச்சி செய்தால் அதில் உள்ள அ[illegible]யங்கள் விளங்கக்கூடும் இந்த வழியில் ஸ்ரீ அய்யாத்துரை அய்யரவர்கள் நமது மதத்திற்கு விசேஷ கைங்கர்யம் செய்வது கொண்டாடத்தக்கது. அவர் தமக்கு அமைந்துள்ள யோக சாஸ்திரப் பரிசயத்தைக் கொண்டு சாஸ்திர விரோதமற்ற வழியில் புதிய வழியைக்காட்ட முன்வந்திருப்பதும் போற்றத்தக்கதே.

இந்த தள்ளாத பருவத்தில் அவர் தமது சரீர ச்ரமத்தையும் பணச்செலவையும் கூடப்பாராட்டாமல், யுவாவைப்போல் மிகுந்த உத்ஸாஹத்துடனும் ஊக்கத்துடன் இத்தகைய புஸ்தகங்களை வெளியிட முன் வந்திருப்பதை ஆஸ்திகர்கள் ஆதரிக்க வேண்டியது கடமை. ஸ்ரீமான் அய்யரவர்கள் மிக்க பரிச்ரமத்துடன் ஆராய்ச்சி செய்து வெளியிட்டுள்ள விஷயங்களை அறிவாளிகள் சிரத்தையுடன் படித்துப்பார்த்தலே தமக்குப் பெரிய பிரதி பிரயோஜனமாக அவர்கருதுகிறுர். ஆகையால் ஒவ்வொருவரும் இவருடைய புஸ்தகங்களை படிக்க வேண்டியது அவச்யமாம். அத்துடன் இதற்கு ஸாத்யமான உதவியும் புரிய வேண்டும்.

மாணவர்கள் மனதில் கிருஷ்ணசரித்திரத்தைப் பற்றி தப்பு எண்ணம் உண்டாகும்படி துஷ்பிரசாரம் நடந்து வருகிறது ஆதலால் இப்புஸ்தகத்தை பள்ளிடங்களில் பாடமாக வைப்பது ஆவச்யகமாம்.

இப்புஸ்தகத்தை ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் ஆதரித்திருப்பதுடன், திவான் பஹதூர் கே எஸ். ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரியார் முகவுரையும் எழுதியுள்ளார். இதன் விலை அணு 2 ஜனார்த்தன பிரஸ்ஸிலும் ஆசிரியரிடமும் கிடைக்கும்.

லலிதோபாக்யான விமர்சம்

சென்னை பிரம்ம வித்யா விமர்சனி ஸபையின் பிரசுரங்களில் 7 வதாக மேற்படிப் பெயர்கொண்ட புஸ்தகமொன்று வெளியிடப்பட்டிருக்கிறது. ஷை ஸபையின் ஸ்தாபகரும் தலைவருமான பிரம்மஸ்ரீ என். ஸுப்ரமண்ய அய்யர் அவர்களால் இப்புஸ்தகம் எழுதப்பட்டது.

இப்புஸ்தகத்தில் ஸ்ரீலலிதா தேவியின் சரித்திரச் சுருக்கமானது விமர்சன ரீதியில் தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீ லலிதா தேவியின் சரித்திர விசேஷங்களைக் குறிப்பாக அறிந்து கொள்ளுவதற்கு வேண்டிய விவரங்கள் அதில் அடங்கியிருக்கின்றன. மிக்க உபயோகமுள்ள புஸ்தகமாகும்.

இதன் கடைசியில், "ரச்மிமாலாஸ்தோத்ரம்" நாகர எழுத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. விலை அணு ரூ 0—4—0.

சென்னை ப்ரம்ம வித்யா ஸபாவிலும், கும்பகோணம் ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்டிலும் கிடைக்கும்.

ஏகாதசி உபந்யாஸம்.

கும்பகோணம்

சென்ற 10—11—40 ஏகாதசிதினம், கீழடபீர்தெரு படித்துறையில், பிரும்மஸ்ரீ நாராயண சாஸ்திரிகள், "குசேலோ பாக்[illegible]னம்" உபந்யாஸம் செய்தார்கள். அதில் [illegible] பிரதானத்தைப்பற்றி விரிவாகச் [illegible]ருஷ்ண பரமாத்மா எப்படி பூர[illegible] அனுக்ரஹித்தார் [illegible] பர்த்திற்குள்வாகச் சொன் [illegible]

எஸ். ராஜாமணி சாஸ்திரி,

மேட்டுத்தெருவில் ஏகாதசி உபந்யாசம்

கும்பகோணம் மேட்டுத்தெரு அக்கிரஹாரம் ஸ்ரீ செங்கழனீர் விநாயகர் ஆலயத்தில் விக்கிரமஹு ஐப்பசிமீ 25உ (9-11-40 ஸ்ரீமத் பரமசார்யாள் ஆக்ஞைப் பிரகாரம் ஏகாதசியை முன்னிட்டு சுகன்யா உபாக்யானம் பிரம்மஸ்ரீ கச்சபேஸ்வர சாஸ்திரிகளால் நடைபெற்றது.

பிரம்மஸ்ரீ கச்சபேஸவர சாஸதிரிகள் ஐப்பசிமீ 12உயிலிருந்து பிரவசனம் பண்ணி வந்த துலாபுராணத்தில் ஐப்பசிமீ 28உ (13-11-40) காவேரி கல்யாணம் அக்ரஹாரவாசிகள் உதவியால் வெகுவிமரிசையாக நடைபெற்றது. அப்பொழுது அங்கு விஜயம் செய்திருந்த வக்கீல் பிரம்மஸ்ரீ ராவ் சாகிப் P. குருசாமி அய்யர் புராணம் சிரவணம்செய்த ஸ்திரீ, புருஷர்களுக்கும், உபன்யாசம் செய்த சாஸ்திரிகளுக்கும் இடம் கொடுத்து உதவிய பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய அய்யருக்கும் அக்ரஹாரவாசிகள் சார்பாக வந்தனோபசாரம் செய்தார். புராணம் ஐப்பசிமீ 30உயோடு பூர்த்தி ஆயிற்று.

25-11-40உ திங்கள்கிழமை மாலை 4 மணிக்குஏகாதசியை முன்னிட்டு ராஜாவேத பாடசாலை ஹெட்மாஸ்டர் ஸாஹித்ய வேதாந்த சிரோமணி பிரம்மஸ்ரீ S. M. ஸ்வாமிநாத சாஸ்திரிகள் ருக்மணி கல்யாணம் உபந்யாசம் நடைபெற்றது.

டி. ஜெ. கிருஷ்ணமூர்த்தி.
ஸ்ரீமடம் முத்திராதிகாரி.

ஓர் வித்வத் ரத்தினத்தின் மறைவு.

புதுக்கோட்டையில் அனுதாபம்.

பண்டித ஸமூகத்திற்கு திலகமாக விளங்கியவரும், நமது ஸ்ரீஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தின் ஆஸ்தான வித்வானாக இருந்தும் ஸ்ரீ பரமாசார்யாளின் பரிபூர்ண அனுக்ரகத்திற்கு பாத்திரராய் இருந்தவாளும் அத்வைத வேதாந்தம் ஜ்யோதிஷம் கணனம் முதலிய சாஸ்திரங்களில் மிக்க தேர்ச்சி அடைந்தவரும், எவ்விதமான துரூஹமான விஷயங்களையும் பாமரனுக்கும் தெளிவுற போதிக்கும் சக்தி வாய்ந்தவரும், மிக்க ஸௌலப்ய குணமுள்ளவராயும், விசேஷித்து நமது நகர வாஸிகளுக்கு பல அரிய பெரிய விஷயங்களை சென்ற சில வருஷங்களாக போதித்தருளியவரும், வாராஹபுரம் என்ற வரகூர் கிராம வாஸியும் மதராஸ் யூனிவர்ஸிடியில் ஜ்யோதிஷம் கணனம் முதலிய சாஸ்திரங்களில் பரீக்ஷாதிகாரி ஸ்தானம் பெற்றவரும் பாஷ்ய பாவஜ்ஞ, ஸ்மிருதி பூஷணம் என்ற பிருதுகள் பெற்றவருமான 65 வயதுள்ள ஸ்ரீ வி. எஸ். வேங்கடராம சாஸ்திரிகள் அவர்கள் 13—11—30 புதன் கிழமை தினம் நித்யானந்த ரூபமானதும் புனராவர்த்திரஹிதமானதுமான ஸாக்ஷாத் பிரும்ம ஸாயுஜ்யத்தை அடைந்தார்கள் என்ற செய்தி இன்று கிட்டியது.

இவ்விஷயமாக வைதிகவர்தினிசபையின் கூட்டம் கூடியதில் ஸ்ரீ எம். வி. இராகவ சாஸ்திரிகள் அவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள். ஸ்ரீ சிவஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் அடியில் கண்ட தீர்மானங்கள் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீ தர்மஜ்ஞ பஞ்சாபகேசகனபாடிகள் அவர்களாலும் ஸ்ரீகல்யாணசுந்தர கனபாடிகள் அவர்களாலும் ஆமோதிக்கப் பெற்று இன்னும் மற்றுமுள்ள ஸபையோர்களாலும் அங்கீகரிக்கப் பட்டது.

தீர்மானங்கள்

இப்பெரியாரின் பிரிவானது இச்சபையோர்களுக்கும் மற்றுமுள்ள இந்நகர ஆஸ்திகர்கள் அனைவருக்கும் அளவில்லாத துக்கத்தை அளிக்கிறது. பண்டித கோஷ்டியில் சிரோபூஷணமாக விளங்கிய அன்னாரின் பிரிவானது ஸமூகத்திர்க்கே அனிவார்யமான துக்கத்தை உண்டு பண்ணுவதாயும் பெருத்தகஷ்டத்தை உண்டுபண்ணுவதாயும் இருக்கிறது.

இச்சிரேஷ்டரின் மறைவால் உண்டாகும் துக்கத்தை அன்னாருடைய குடும்பத்தாருக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இப்பெரியாரின் பிரிவைப் பாராட்டி ச்லோகங்கள் படிக்கப்பட்டன. இச்சபையின் கார்யதரிசி ஜி. மலையப்பசாஸ்திரி இத்தீர்மானங்களை அன்னாருடைய குடும்பத்தாருக்கும்தெரிவிக்கிறதென்றும் ஆர்யதர்மம் ஹிந்து முதலிய பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்ய வேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது. ந. கி.

தார்மிகயுவக் சங்கம்

கோவிலூர்

இவ்வூரில் டி. என். ரெகுநாத பாகவதரால் (கும்பகோணம்) 16—11—40உ ஸீதாகல்யாணமும் 17—11—40உ அங்குளிய ப்ரதானமும் பட்டாபிஷேகமும் வெகு விமரிசையாக உபன்யாசம் செய்யப்பட்டது. கடைசியில் கோவிலூர் வாஸிகளால் உபன்யாசங்களுக்கு சம்பாவனை வழங்கபட்டது.

வி. ராமமூர்த்தி. காரியதரிசி.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்
விக்ரம-௵ ஐப்பசி-௴ 29௳

ஸ்திதி ரக்ஷணமே நமது நோக்கம்.

பாரத தேசத்தில் பற்பல மத, ஸமூஹ ராஜீயக் கக்ஷிகள் தோன்றி வெகு ஆடம்பரமாகப் புதிய கொள்கைகளைப் பிரசாரம் செய்து வருகின்றன. நவீன காலத்திற்கு ஏற்றபடி நடித்துவரும் பத்திரிகைகளும் அவைகளுக்குப்பின் பலமாக நின்று தூக்கி விடுவதுடன் மஹா ஜனங்களின் மனதையும் நிலையற்றுப்போகும்படி குழப்பி வருகின்றன. இந்நிலையில் ஸனாதநிகளும் மேற்கண்ட கக்ஷிகளைப்போல் ஓர் பொதுக்கக்ஷியாக அமைந்து ஏன் வேலை செய்யக்கூடாதென்று குறை கூறப்படுவதைப் பார்க்கிறோம். ஸனாதநிகளுக்கு ஒன்றுபட்ட கொள்கை கிடையாதென்றும் அவர்களுள் கட்டுப்பாடு கிடையாதென்றும், அதனாலேயே அவர்களது முயற்சிகள் பலிக்காமற் போய்விடுவதாயும் குறை சொல்லப்படுகிறது. ஸனாதநத்தில் தீவ்ர அபிமானமுள்ள தீரர்களும் பலர் இத்தகைய குழப்பத்தில் சிக்குண்டு நிர்வேதமும், அசிரத்தையும் அடைவதைப் பார்த்து வருகிறோம்.

ஆயினும் அவர்கள் உண்மையைச் சற்று உற்றுநோக்கினால், நமது பிரசாரத்தின் நோக்கமென்ன வென்பதையும், நமது தர்மத்தின் பலமான பிரசார அஸ்திவார அமைப்பையும் நன்கு அறிந்துகொள்ளமுடியும்.

பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பாகவே நமது முன்னோர்கள் நம்மவர்கள் மனதில்,ரத்தவோட்டத்தில் நமது தர்மதத்வங்கள் ஊறிநிற்கும்படியான வழியில் புஸ்தகங்கள் மூலமாயும், உபதேசங்கள் மூலமாயும், பிரசாரங்கள் மூலமாயும் காரியம் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு ஹிந்துவிடமும் ஸனாதந தர்மமானது தினசரி வாழ்க்கையில் பற்பல அம்சங்களிலும் பதிந்து நின்று ஆசரிக்கப்பட்டே வருகிறது. அதனால் ஸனானம், ஸந்த்யை, தேவார்ச்சனம் போன்ற தர்மங்கள் எவ்வித பிரசாரமின்றியும் யாங்கும் பரவிநிற்கின்றனவென்பதை மறைக்க முடியாது. புண்யகாலங்களில், க்ஷேத்திர யாத்ரையோ, தீர்த்த யாத்திரையோ போகிறவர்கள் லக்ஷக்கணக்கில் இன்னும் காணப்படுகின்றனர். தேவாலய உத்ஸவங்களுக்கும் கும்பாபிஷேகாதி விசேஷங்களுக்கும் பக்தி சிரத்தையுடன் போகும் ஜனக்கூட்டத்திற்கு அளவில்லை. இவைகளுக்கெல்லாம் எங்கு யார் பிரசாரம் செய்து தூண்டினார்கள்? ஒன்றுமில்லை.

மேலும் ஸனாதந தர்மத்தின் ஆசரணைகளில் பெரும்பாலானவைகள், அவரவர் தனித்தனியாக வீடுகளிலோ, வேறு ஏகாந்தப்பிரதேசங்களிலோ அநுஷ்டிக்கப்படவேண்டியவைகளாக அமைந்துள்ளன. ஸந்தியாவந்தனாதி கர்மாக்களை செய்கிறவர்கள் யாவரும் ஒரு கூட்டமாயிருந்து குறிப்பிட்ட இடத்தில் அவைகளைச் செய்யவேண்டுமென்று நிர்ப்பந்தமில்லை.

வைத்தியர்கள் அந்தந்த மனிதனுக்கு ஏற்றவாறு சிகித்ஸை முறையைக் கையாளுகிறார்கள். எல்லோரும் ஒரேமுறையைக்கொள்ளமுடியாதல்லவா?

ஆகையால் எவர் எப்படி நினைத்தாலும் பாரத தேசம் முழுவதும் இப்போது ஸனாதநத்தைப் பின்பற்றியே நிற்கிறதென்பதில் ஒருவரும் ஸம்சயிக்க இடமில்லை. விதவா விவாஹம், கலப்பு விவாஹம் போன்ற விபரீதங்களைச் சீர்திருத்தக்காரர்கள் எவ்வளவோ பலமாக பிரசாரம் செய்தும் இன்றுகூட நம் தேசத்தில் ஓரிடத்திலாவது கூட்டம் கூட்டமாக அவைகளை ஆதரிக்க தைர்யம் கொண்டவர் ஒருவருமில்லையென்பதை கவனிக்கவேணும். ஏன்? ஒவ்வொரு ஹிருதயத்திலும் ஸனாதந [illegible] வோட்டத்தை நம் பூர்வர்கள் எ[illegible] வேண்டியளவு ஏற்படுத்தியி[illegible] [illegible] த்ரங்கள், நதி[illegible] பே[illegible] ஸனாதந பிரசாரத்திற்காக [illegible] வேலை செய்யும் ஸாதனங்களாக [illegible] கப்பட்டுள்ளன. மேற்கண்ட இடங்களில் ஸனாதநம் செழித்துத்தான் விளங்குகிறது. ஸமூஹத்தில் எங்கோ ஒரு மூலையில் வெகு சிறியதாகத் தோன்றியுள்ள ஒரு மாறுதலை கொண்டு ஸனாதநமே அற்றுப்போய் விட்டதாக பீதிகொள்ள அவகாசமில்லை.

ஆதலால் ஸனாதநிகள் பெரும் கூட்டமாகக் கக்ஷியாயிருந்து செய்யவேண்டிய வேலை வேறு மாதிரியானதேயாகும். இப்போது ஸனாதநிகள் செய்யவேண்டிய காரியமானது ஸ்திதிரக்ஷணமேயாகும். ஸனாதநிகள் மனதில் விபரீதத்தை போதிப்போர்களை எதிர்த்து அது பரவவொட்டாமல் செய்யவேண்டியதே ஆவச்யகமானது. மேலும் வைதிக ஹிந்து மதமானது மிக்க ஸஹிப்புத் தன்மை வாய்ந்தது. மத விஷயத்தில் எந்தப் பிரிவினரையும் அது விலக்கவில்லை. எல்லோரையும் ஒன்று சேர்த்து வைத்திருக்கிறது. ஆதலால் எதிர் மதங்களைத் துரத்துவதற்காகவும் ஸனாதநிகள் கக்ஷியாய் சேர்ந்து பிரசாரம் செய்யவேண்டிய அவச்யமில்லை. ஸனாதநக் கக்ஷியில் அபிமானமில்லாதவர்கள் போல் தோன்றுகிற ஆஸ்திகர்கள் தங்கள் மட்டில் அந்த தர்மத்தை விடாமல் உறுதியுடன் ஆசரிப்பவர்களாக ஆயிரக் கணக்கில் இருப்பதைப் பார்க்கிறோம். ஆகையால் நமது பிரசாரமானது நமது ஸ்திதியை ரக்ஷணம் செய்து கொள்ளும் நோக்கமுள்ளதென்பதை முக்யமாய் பலரும் அறியவேணும்.

காலஞ் சென்ற பிரம்மஸ்ரீ பாஷ்ய பாவக்ஞர்.

நமது ஆர்யதர்மம் மாஜி ஆசிரியர் ஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகளின் தேகவியோக துக்கத்தைப்பற்றிச் சென்ற வாரம் குறிப்பிட்டோம். இன்று மற்றொரு பெரிய துக்க ஸம்பவத்தைக் குறிப்பிட மிகவும் வருந்துகிறோம். நமது பத்திரிகையின் மாஜி ஆசிரியராயிருந்த வரகூர் பிரம்மஸ்ரீ வெங்கடராமசாஸ்திரிகளவர்கள் தமது 65வது வயதில் இறைவனடி சேர்ந்த விஷயத்தைக் கேட்டு ஆராத்துயரமடைந்தோம். பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் இந்த தஞ்சை ஜில்லாவுக்கு மட்டுமன்றி தென்னிந்தியாவிற்கே ஓர் வித்வன் மணியாக விளங்கி வந்தாரென்பது மிகையாது. தர்க்க வேதாந்தாதி சாஸ்திரங்களில் இவர் நல்ல பாண்டித்யம் பெற்றிருந்ததுடன், ஸ்மிருதிகள், நிபந்தனங்கள், ஜ்யோதிஷம், கணிதம் போன்றவைகளிலும் நிகரற்ற பாண்டித்யம் பெற்றவராயிருந்தார். இவருக்கு ஏற்பட்டிருந்த "பாஷ்ய பாவக்ஞ" "ஸ்மிருதி பூஷண" முதலான பிருதங்கள் முற்றிலும் அந்வர்த்தங்களாகவே யிருந்தன.

பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் உபந்யாஸங்கள் புரிவதில் நல்ல தேர்ச்சி பெற்றவர். நவீன கால துர்வாதங்களைத் தக்க யுக்தி, நியாயாதிகளால் பல ஸபைகளில் சிதற அடித்து இவர் பேசியிருப்பதைப் பலரும் அறிவார்கள்.

[illegible]ஆர்யதர்மம் புஸ்தக வடிவமாகப் பிரசுர[illegible] வந்த ஸமயத்தில் ஸ்ரீசாஸ்திரிகள் தொ[illegible]து சில வருஷங்கள் ஆசிரியாக இருந்து [illegible]கு கம்பீரமான தலையங்கங்களை எழுதி[illegible]ததை இப்பத்திரிகை நேயர்கள் மறந்திரு[illegible]மாட்டார்கள். ஸ்ரீமடம் ஆஸ்தான [illegible]வானுயிருந்தார். ஸ்ரீஜகத்குரு ஆசார்[illegible]ரின் அநுக்ரஹத்திற்கு பாத்திரமான [illegible] அத்வைத ஸபை பிரதான பண்டிதர்.

[illegible]ஸ்ரீசாஸ்திரிகள் சிறந்த வைதிக ச்ரேஷ்டர். அநுஷ்டாதா. ஔபாஸன வைச்வதேவாதி நித்யகர்மங்களை உறுதியுடன் அநுஷ்டித்து வந்தார்கள். சில வருஷங்களுக்கு முன் அக்நிஹோத்ராதி சிரௌத கர்மாக்களையும் அநுஷ்டிக்க ஆரம்பித்தார்கள். வெகு பக்தி சிரத்தையுடன் அக்நிஷ்டோம மஹா யாகத்தையும் சிறப்பாக நடத்தினார். தாம் எங்கு சென்றாலும் அக்னிஹோத்ரத்துடனே போவது வழக்கம்.

தென்னிந்தியாவில் பல நகரங்களிலும், கிராமங்களிலும் ஸ்ரீ சாஸ்திரிகள் புராணப் பிரவசனம், அத்வைதாதி மத பிரஸங்கம் ஸனாதனதர்ம பிரசாரம் முதலியவைகளை இடைவிடாது செய்து வந்தார்கள், எல்லா ஸம்ப்ரதாய லௌகிக வைதிக பொது ஜனங்களாலும் நன்கு மதிக்கப்பட்டவர்.

ஸ்ரீ சாஸ்திரிகள் போன்ற உத்தமர்கள் ஒருவர் பின் ஒருவராக மறைந்து வருவது நமது பெரும் துர்ப்பாக்ய மென்றே நினைக்கவேணும். இவரைப் போன்ற ஞான, அநுஷ்டான சிரேஷ்டர்களான பெரியோர்கள் வெகுகாலம் ஜீவித்து நம் தேசத்தை அலங்கரிக்கச் செய்யும் பாக்யம் நமக்கில்லையே! ஸ்ரீ சாஸ்திரியாரின் வியோகமானது வித்வத் ஸமூஹத்தில் ஸமாளிக்க முடியாத ஓர் பெரிய நஷ்டமேயாகும். அவரது குடும்பதனிருக்கு நமது மனப்பூர்வகமான வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

"பால்ய விவாஹத் தடை மசோதாவை ரத்து செய்க"

கொச்சி மஹாராஜாவுக்கு ஸனாதன தலைவரின் வேண்டுகோள்

அகில இந்திய வர்ணாச்ரம சங்க தலைவர் ராவ்சாகிப் நடேசய்யர், கீழ்கண்ட வேண்டுகோளை தக்க ஆதாரங்களுடன், ஒரு விண்ணப்ப மூலமாக, கொச்சி மஹாராஜாவுக்கு அனுப்பியுள்ளார்.

"தேச முழுவதும் பரவியுள்ள எண்ணிறந்த ஸனாதனிகளின் சார்பாக, இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கிறேன். தாங்கள் தயை கூர்ந்து, எங்களது குறைகளை கவனித்து, நியாயம் வழங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கொச்சி சட்டசபையில் முன்னேறிவரும் பால்ய விவாஹத்தடை மசோதாவைப்பற்றி தார்மிக ஹிந்துக்கள் மிகவும் கவலைப்படுகிறார்கள். ப்ராசீன சம்பிரதாயங்களையும், கொள்கைகளையும் காப்பாற்ற தாங்கள் மிகவும் பாடுபடுகிறீர்கள். அப்படி இருக்கும் தங்களது ஆட்சியில் ஒரு ஸ்திரீ அங்கத்தினர், சமூகத்துக்கு கெடுதலான ஒரு சட்டம் கொண்டுவரும்படியான நிலைமை ஏற்பட்டது மிகவும் வருந்தத்தக்கது.

தார்மிக ஹிந்துக்களின் முக்யமான வேண்டுகோள் என்னவென்றால் தாங்கள் மனமுவந்து ஷை அசாஸ்திரீயமான மசோதாவை சட்டமாக்காமல், அதை முழுவதும் ரத்து செய்யவேண்டுமென்பதே. அப்படி ஒரு சமயம் முடியாவிட்டால், தங்களது ப்ராசீன பழக்க வழக்கங்களால் கட்டுப்பட்ட பிராமணர்களுக்கும், மற்றும் அதே மாதிரியான இதர ஜாதியினருக்கும், சட்டம் பாதிக்காதவாறு செய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். அம்மாதிரி செய்யாவிட்டால் நாட்டில் பெருத்த அனர்த்தமும், கெடுதலும் ஏற்படும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பல அறிஞர்களுடைய கட்டுரைகளிலிருந்தும், புஸ்தகங்களிலிருந்தும், எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட ஆதாரங்கள் உபயோகமுள்ளதாக இருக்கும்.

ஜஸ்டிஸ் லிண்ட்ஸே (Justice Lyndsay) இவர் அமெரிக்காவின் கியாதிவாய்ந்த நியாயாதிபதியாவார். அவர் பின்கண்டவற்றை எழுதியிருக்கிறார்.

"வாழ்க்கை சமுத்திரத்தில், ஒரு பெண்ணின் பதினோராவது வயதை கற்பு அல்லது நிதானம் என்னும் கப்பல் மோதும்படியான அபாயகரமான ஒரு பாறைக்கு ஒப்பிடலாம். பள்ளியில் படிக்கும் பெண்களுள் 90 சத விகிதத்துக்கு மேற்பட்ட நபர்கள் கட்டிக்கொள்வதிலும், முத்தமிடுவதிலும் ஈடுபடுகிறார்கள். அதில் 50 சதவிகிதத்துக்கு மேற்பட்டவர்கள் அப்படி ஆரம்பித்து கடைசி எல்லைக்கு போய்விடுகிறார்கள். மற்றும் பல விதமான துஷ்பிரயோகங்களையும் காணலாம். ஒரு பள்ளி மாணவன் மட்டும் 15 பெண்களுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்தானும். நியு யார்க் நகரத்தில் மட்டும், அரை லக்ஷத்துக்குமேல் பெண்கள் கணவர்கள் என்று சொல்ல முடியாத மனிதர்களிடம் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அமெரிக்க தேசத்தில் சுமார் 15 லக்ஷம் கர்ப்ப அழிவுகள் ஏற்படுகின்றன"

ஜஸ்டிஸ் ரௌலட் (Justice Rowlatt):— சட்ட சபையானது விவாஹ வயதின் எல்லையை நிர்ணயிக்கலாமே தவிர, ருதுவாகும் வயதையாவது, தாயாராக ஆகும் வயதையாவது தடுக்கவும், கட்டுப்படுத்தவும் முடியாது. எலிஸபெத் ராணியார் காலத்திலேயே, பால்ய விவாஹங்கள் வழக்கமாக இருந்து வந்தது. சிசு மரணங்களுக்கும் பால்ய விவாஹத்துக்கு ஒருவிதசம்பந்தமும் கிடையாது. திடகாத்திரமும், வீரியமும் நிறைந்த குழந்தைகள் பால்ய விவாஹத்தினால் ஏற்படுகிறார்கள் என்பது சரித்திரச் சான்று.

வெரோனா நகரத்தில், 14 வயதிற்குக் கீழ்பட்ட பெண்கள் தாயார்களாக சந்தோஷ வாழ்க்கை நடத்தி வந்தார்கள் என்று மேனாட்டு கவியரசர் ஷேக்ஸ்பியரின் "ரோமியோவும், ஜூலியட்டும்" (Romeo and Juliet of Shakespeare) என்னும் நாடகத்திலிருந்து அறிகிறோம்.

இங்கிலாந்தில் அரசராயிருந்த மூன்றும் எட்வர்ட் தனது 16 வயதில் மணம் செய்து கொண்டான். அவனுடைய 17 வயதில்' திறமை வாய்ந்தவனும் கறுப்பு இளவரசன் (Black Prince) என்றும் புகழ்பெற்ற பிள்ளையை பெற்றான். வடமேற்கு மாகாணத்திலும், பஞ்சாப் மாகாணத்திலும் வசிக்கும் ஜனங்கள், தேக ஆரோக்கியத்திற்கும், திடகாத்திரத்திற்கும் உலகத்திலேயே பெயர் பெற்றவர்கள். அவர்களும் பால்ய விவாஹத்தைத்தான் அனுஷ்டிக்கிறார்கள். ஐக்கிய மாகாண பிராம்மணர்களும், நேபாள தேசத்து கூர்க்கர்களும் பால்ய விவாஹத்தினால் ஏற்பட்ட நன்மையின் உதாரணங்கள். சென்ற ஐரோப்பிய யுத்தத்தில் தங்களுடைய வீரத்தனத்தினால் தேசத்துக்கு புகழை கொடுத்தனர். (General Mac. Carrisons.)

இந்தியமெடிகல் கெஜட்டில் கர்னல் ஆர் மிடேஜ் என்பவர் விவாஹ வயது நிர்ணயக் கமிட்டியார் சொன்னபடி சிசு மரணத்துக் [illegible] சிறிதேனும் [illegible]யன்றி எழுதியிருக்கிறார்.

[illegible] மார்க் (Edward webter Mark) [illegible]னும் அமெரிக்கப் பெரியார் அமெரிக்க பெண்களுக்கு சரியான விவாஹ வயது 16 என்றும், உஷ்ணதேசப் பெண்களுக்கு 12 என்றும் அபிப்பிராயப்படுகிறார். இந்தியா உஷ்ண நாடு என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. (தொடரும்)

வரி மசோதா நிராகரிக்கப்பட்டது

யுத்த அவஸரச்செலவுகளை யுத்தேசித்து இந்தியா கவர்ன்மெண்டார் சட்டசபையில் கொண்டுவந்திருந்த வரி மசோதாவானது நிராகரிக்கப்பட்டுவிட்டது. அதற்கு ஸாதகமாக 53 வோட்டுகளும் விரோதமாக 55 வோட்டுகளும் கிடைத்தன.

முஸ்லீம் லீக் கக்ஷியார் நடுநிலைமை வகித்தனர்.

வனபோஜனம்

கும்பகோணம்.

நமது நகர் மாத்வ மகாஜனங்களின் பேராதரவைக்கொண்டு சில மாத்வபிரமுகர்களால் வழக்கம்போல் வனபோஜனம் 18—11—40 திங்களன்று கிருஷ்ணராயர் அக்கிரஹாரம் ஸ்ரீ கே. ஆர். ரெகுநாதராவ் அவர்களின் விட்டல மந்திரத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலையில் புண்யாஹவாசனம் தாத்ரிபூஜை, தாத்ரிஹோமம் முதலியனவும் மத்தியானத்தில் சுமார் 700 பேருக்கு பிராம்மணஸந்தர்ப்பணையும் செய்ய செய்யப்பட்டன என்று ஸ்ரீ எம். ராமராவ் அறிவிக்கிறார்.

ஸ்ரீமான் படேல் கைதியானார்.

ஸ்ரீமான் ஸர்தார் படேல் இந்தியப்பாது காப்புச்சட்டபடி பம்பாய் கவர்ன்மெண்டாரால் ஆமதாபாத்தில் கைது செய்யப்பட்டு ஸபர்மதி ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கிறார். விசாரணையின்றியே இவரைக்காவலில் வைத்திருக்க உத்தேசமெனச்சொல்லப்படுகிறது.

பீஹாரில் மதுவிலக்கு

உத்திரவு செல்லாது

ஹைகோர்ட் புல்பெஞ்ச் தீர்ப்பு

பீஹாரில் காங்கிரஸ் மந்திரிகள் மதுவிலக்கு விஷயமாகச் செய்திருந்த உத்திரவு சட்ட விரோதமென்றும் செல்லுபடியாகாதென்றும் பாட்னா ஹைகோர்ட் புல்பெஞ்சில் தீர்மானிக்கப்பட்டது. ஆதலால் அங்கு மதுவிலக்கு முயற்சி முறிந்துவிட்டது. ஏற்கனவே பம்பாயில் இப்படி நடந்தது நேயர்களுக்குத்தெரியும்.

சேம்பர்லேனுக்கு தஹனம்

சாம்பல் அடக்கம் சடங்கு

பிரிட்டிஷ் மாஜி பிரதம மந்திரி சேம்பர்லேனின் பிரேதமானது கிறிஸ்[illegible] கோட்பாட்டிற்கு மாறாக தஹனம் செய்யப்பட்டது. அந்த[illegible]பலானதுக்முயமான [illegible] மத விதிப்படி அடக்கம் செய்யப்பட்டதாம். இந்தச்சடங்கை பெரிய பிரதான பாதிரியான காண்டர்பரி ஆர்ச்சு பிஷப் நடத்தினாராம். பிரார்த்தனைகளும் நடந்தனவாம். இது எந்த முறையைச்சேர்ந்ததோ?

முஸ்லீம் ஆக்ஷியில் ஹிந்துக்களுக்கு தொந்திரவு

மதத்திற்கும் ஸ்திரீகளுக்கும் ஆபத்து

ஸர். எம். என். மூகர்ஜீ கூறுகிறார்

வங்க மாகாண ஹிந்துக்களின் மஹாநாடு கிருஷ்ணநகர் என்றவிடத்தில் நடந்தது. கல்கத்தா ஹைகோர்ட்டு மாஜி ஜட்ஜான ஸர் மன்மதநாத முகர்ஜி அவர்கள் தலைமை வகித்துப் பேசியதில், வங்காளத்தில் வகுப்புத் தீர்ப்பு அக்கிரமத்தாலும், முஸ்லீம் மந்திரி ஆக்ஷியாலும் ஹிந்துசமூகத்தின் உரிமைகள் நசித்து வருவதுடன், ஹிந்துக்கள் தங்கள் மதச் சடங்குகளைக் கூடச் செய்ய முடியாதபடி கஷ்டமேற்படுகிறதாயும், முஸ்லீம்கள் வஸிக்குமிடங்கள் பக்கமாக ஹிந்து ஸ்திரீகள் பந்தோபஸ்தாக போய்வர முடியாமல் கஷ்டமேற்பட்டு வருவதாயும், இந்த நிலைமையில் நீடித்திருந்தால் வங்க ஹிந்து ஸமூஹம் மறைந்துவிட நேருமென்றும், ஆதலால் மாகாண அரசியல் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் அவர் கூறுகிறார்.

வைதிக தர்ம ஸங்கம், தேசஸங்கம்.

वैदिकधर्मसंघः देशसंघः

नित्यानुसंधानम्

॥ ओं तत्सत ॥

नमस्ते नरदेवाय नमो नारायणाय च ।

बदरीवननाथाय योगिनां पतये नमः ॥

॥ वैदिकधर्मसंघाश्रमः ॥

ओं नमो भगवते वासुदेवाय

ओं वैदिकदेवात्मने नमः

ओं वैदिकधर्मदेवात्मने मनः

ओं वैदिकधर्मसंघदेवात्मने नमः

ओं वैदिकधर्मसंघाश्रमदेवात्मने नमः

ओं नमो भगवते वासुदेवाय ॥

வேதபுருஷ த்யானம்.

हिरण्यगर्भाननमारुतोत्थाः
हिताय लोकत्रितयस्य संस्थाः ।
निरन्तरं रक्षत नः कुलानि
वेदा वयं वः शरणं प्रपन्नाः ॥ १ ॥

பிரும்மதேவரின் முகமண்டலக் காற்றினின்று வெளிக்கிளம்பிய (வைதிகதர்ம) மர்யாதைகள் இம்மூவுலகிற்கும் ஹிதத்தின் பொருட்டு (இருக்க வேண்டும்) ஓ! வேதங்களே! [illegible] ரக்ஷிக்கக் கடவீர்களாக. நாங்கள் உங்களை சரணாகதி செய்கின்றோம்.

अशेषदोषप्रतिषेधदक्षाः
आत्मावबोधार्पणबद्धदीक्षाः ।
निरन्तरं रक्षत नः कुलानि
वेदा वयं वः शरणं प्रपन्नाः ॥ २ ॥

ஸகல (கலிகால) தோஷங்களை நிவர்த்திப்பதில் ஸமர்த்தங்களாயும், ஆத்மஞானத்தை அளிப்பதில் தீக்ஷாபந்தத்துடன் விளங்குகின்றன வாயுமிருக்கின்ற ஹே! வேதங்களே! எங்கள் குடும்பங்களை எப்போதும் ரக்ஷிப்பீர்களாக. நாங்கள் உங்களை சரணமடைந்து விட்டோம்.

विशेषतो वैदिकधर्मानिष्ठा
विजृम्भतां नः परितो धरित्र्याम् ।
निरन्तरं .... प्रपन्नाः ॥ ३ ॥

இப் பூமண்டலத்தில் நமக்கு நான்கு பக்கங்களிலும் வைதிக தர்ம மார்க்கத்தின் ஸ்தைர்யமானது விசேஷமாக விருத்தியாக வேண்டும். ஹே! வேதங்களே! எங்கள் குடும்பங்களை பரிபாலனம் பண்ணுவீர்களாக. நாங்கள் உங்களை சரணம் செய்தவர்களாயிருக்கிறோம்.

चतुर्दशानां जगतां जनो ये
नन्दन्तु ते धर्म्यपथानुषक्ताः ।
निरन्तरं .... प्रपन्नाः ॥ ४ ॥

பதினான்கு உலகத்தில் உள்ள ஜனங்கள் அனைவரும் ஸனாதந வைதிக தர்ம மார்க்கத்தைப் பின்பற்றினவர்களாக ஸந்தோஷிக்க வேண்டும். ஹே! வேதங்களே! எங்கள் குடும்பங்களை எப்போதும் ரக்ஷிப்பீர்களாக. நாங்கள் தங்களை சரணாகதி யடைகின்றோம்

वेदार्थवेदान्तवचोऽमृतेषु
सक्तं मनो नः सततं च भूयात ।
निरन्तरं .... प्रपन्नाः ॥ ५ ॥

வேதங்களின் முக்ய தாத்பர்யார்த்தமான வேதாந்த வாக்யா மிருதங்களில் எப்போதுமே எங்கள் மனம் (விசேஷ ப்ரீதியுடன்) பற்றிக்கொண்டு இருக்கட்டும். எங்கள் குடும்பங்களை, எப்போதும் ஹே! வேதங்களே! எங்கள் வம்சங்களை பரிபாலிப்பீர்களாக. நாங்கள் உங்கள் [illegible]ங்களை சர[illegible] சாந்தி

ब्रह्म[illegible]भिर्ब्रह्ममयी कथा नः
संवर्धतां सत्यपदैकहेतुः ।
निरन्तरं .... प्रपन्नाः ॥ ६ ॥

ஸத்யமான (மோக்ஷ) பதவிக்கு காரணமான வேதமயமான ஸல்லாபம் பிரும்மரிஷிகளுடன் நமக்கு விருத்தி யடைய வேண்டும். ஹே! வேதங்களே? எங்கள் வம்சங்களை பரிபாலிப்பீர்களாக! நாங்கள் உங்கள் சரணங்களை சரணமடைந்து விட்டோம்.

निरीतिबाधा पृथिवी च भूयात
नीरोगताऽस्मिन् जगति स्थिरा स्यात ।
निरन्तरं .... प्रपन्नाः ॥ ७ ॥

இப்பூமியெல்லாம் இதி பாதை (அதிவர்ஷம், அனாவிருஷ்டி) இதன் உபத்திரவம் இல்லாமலிருக்க வேண்டும். இந்த ஜகத்து எல்லாம் ரோகமற்று ஆரோக்யமானநிலையில் ஸ்திரமாய் இருக்க வேண்டும். ஹே! வேதங்களே? எங்கள் குடும்ப ஸம்ரக்ஷணம் செய்வீர்களாக. நாங்கள் உங்களை சரணாகதி யடைகின்றோம்.

सत्ये स्वधर्मे चरिते पवित्रे
धियः परं चोदयतान्तरस्थाः ।
निरन्तरं .... प्रपन्नाः ॥ ८ ॥

ஸத்யமாயும் பரமபாவனமாயிமிருக்கின்ற தன், தன், தர்மத்திலும் தன், தன் ஆசாரத்திலும் எங்களுள்ளத்திலுள்ள அறிவு விருத்திகளை ஹேவேதங்களே? நீங்கள் பிரவிருத்திக்குப்படி தூண்டுவிளக்குகளாக எங்கள் குடும்பங்களையும் இரக்ஷிப்பீர்களாக நாங்கள் தங்களை சரணாகதி செய்திருக்கிறோம்.

विरोधिनो वैदिकधर्मसेतोः
उत्सार्य तान् भारतवर्षभूमेः ।
निरन्तरं .... प्रपन्नाः ॥ ९ ॥

வைதிக ஸநாதந தர்மமார்யாதைக்குச் சத்துருக்களாயுள்ள ஜனங்களை இப்பாரத பூமியிலிருந்து வெளியில் வெருட்டியடித்துவிட்டு ஹே!வேதங்களே? எங்கள் குடும்பங்களை காப்பாற்றுவீர்களாக. நாங்கள் தங்களை சரணமடைகின்றோம்.

अरोगतामार्यचरित्रवत्तां
अमत्सरत्वं परमं प्रदाय
निरन्तरं रक्षत नः कुलानि
वेदा वयं वः शरणं प्रपन्नाः ॥ १० ॥

ஹே! வேதங்களே? நீங்கள் எங்களுக்கு ஆரோக்யத்தையும் ஆர்யா சாரத்தையும். மாத்ஸர்யம் முதலிய துர்குணங்களில்லாமலிருப்பதையும் அதிகமாக அர்ப்பணம் செய்து எங்கள் குடும்பங்களை இரக்ஷிக்க வேண்டும். நாங்கள் தங்களை சரணாகதி செய்கின்றோம்.

यो ब्रह्माणं विदधाति पूर्वं
योवै वेदांश्च प्रहिणोति तस्मै ।
तँह देवमात्मबुद्धिप्रकाशं
मुमुक्षुर्वै शरण महं प्रपद्ये ॥

எவரொருவர் பிரும்மதேவரை முதலில் (ஸிருஷ்டி ஆரம்பத்தில்) ஸிருஷ்டித்தாரோ, எவர் (தன்னால் உத்பத்தி பண்ணிவைக்கப்பட்ட) அந்தபிரும்ம தேவருக்கு ஸகல சுருதிஸ்மிருதி புராணாதி வித்யைகளையும் ஸ்பூர்த்தியடையும்படி எவினாரோ, அத்தகைய; ஆத்மஞானத்தை பிரகாசிக்கச் செய்கின்ற தேவனைமுமுக்ஷுவான நான் சரணம் செய்கிறேன்.

(இது ஒரு மந்திரம்)

தேவாலய தரிசனம்.

(ஜி. ஜானகிராமய்யர்)

யாவரும் நாட்கள் தவறாமல் ஆலயத்தற்குச் சென்று பகவானை தரிசித்தல் வேண்டும். தினந்தோறும் கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்ய இயலாவிட்டால், புண்ணிய காலங்களிலேயாவது அவசியம் தவறாமற் செய்தால் நலம்.

முதலில் ஆலய தரிசனம் செய்ய விருப்பமுள்ளவர்கள் அங்குள்ள தடாகத்தின் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த உடைகளை அணிந்து, அனுஷ்டானம் முடித்துக்கொண்டு ஆலயத்திற்கு போதல் வேண்டும்.

திருக்கோயில் சமீபத்உடனே, திருகோபுரத்தை வணங்கி, பக்தி சிரத்தையுடன் உட்புகுந்து பலிபீடத்திற்கு இப்பால் நமஸ்காரம் செய்தல் வேண்டும்.

ஆடவர் அஷ்டாங்க நமஸ்காரமும் பெண்டிர் பஞ்சாங்க நமஸ்காரமும் பண்ணல் வேண்டும்.

நமஸ்காரம் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பன்னிரண்டு தரங்களாவது பண்ணல் வேண்டும். ஒருதரம், இருதரம் பண்ணுதல் சாஸ்திரப்படி குற்றம்.

நமஸ்காரம் செய்யும் பொழுது மேற்கு பக்க மாகினும் தேற்கு பக்கமாகினும் கால் நீட்டல் வேண்டும். கீழக்கேயும், வடக்கேயும் கால் நீட்டவே கூடாது.

நமஸ்கரித்தபிறகு எழுந்து இரு கரங்களையும் கூப்பி, கடவுளை மறவாத ஒரே சிந்தனையோடு மனதிலிருத்தி மெல்ல வலப்புறமாக பிரதக்ஷிணம் செய்து வரவேண்டும்,

சிவபெருமானை குறைந்த பக்ஷம் இருபதோரு தடவையாது பிரதக்ஷணம் வந்தால் மிகவும் விசேஷம். கணேசமூர்த்தியை ஒருதரமும்பராசக்தி திருமால் முதலிய தெய்வங்களைநவ்வாறு தடவையும் பிரதக்ஷிணம் செய்தால் நலம்.

பிரதக்ஷிணம் செய்யும் பொழுது ஸ்தூபி நிழலேனும், துவஜஸ்தம்ப நிழலேனும் இருந்தால், அந்நிழலில் மூன்று பாகம் நீக்கி, மிஞ்சிய இரண்டு பாகத்தினுள்ளே செல்ல வேண்டும். அதாவத தன்னைத்தானே பிரதக்ஷிணம் செய்து கொள்வது. அபிஷேக காலத்தில் உட்பிராகாரத்தில் பிரக்ஷிணம் நமஸ்காராதிகள் முதலியவை பண்ணுதல் கூடாது.

பிரதக்ஷிணம், அஞ்சலி, நமஸ்காரம் முதலியவை ஆகிய பின்னர், நாம் கொண்டு வந்திருக்கும் நிவேதனசாமான்களை தேங்காய் பழம் அர்ச்சகரிடம் பக்தி சிரத்தையுடன் கொடுத்து, பகவான் திருநாமத்தை உச்சரித்து அர்ச்சனை செய்யச் சொல்லி, கர்பூராதிகளை தரிசித்த பிறகு, நம்மால் இயன்றவரை அர்சகருக்கு காணிக்கை தக்ஷிணை செலுத்தல் வேண்டும்.

நாம் திருக்கோயிலிற்குப் போகும் பொழுது ஆசாரத்துடன், கால்கை சுத்திசெய்து கொண்டு, மந்திர உச்சாரணத்துடன் செல்ல வேண்டும் கோயிலுக்குள் போகும் பொழுது சட்டை அணிந்து செல்லலாகாது எவ்வளவு தூரம் நாம் ஆசாரத்தைக் கடைபிடிக்கமுடியுமோ அவ்வளவையும் செய்தால் நமக்குத்தான் பிற்காலத்தில் நன்மையுண்டாகும்.

மேலும் கோவிலுக்குப் போகும் பொழுது அவரவர்களுக்குள்ள சின்னங்களை அணிந்து கொண்டு போகலாம்.

தெரிசனம் செய்யப் போகும் பொழுது முறைப்படி குற்றமில்லாமல் தெரிசிக்க வேண்டும். முறை தெரிந்து அநேக குற்றங்களுடன் தரிசினம் செய்வார்களேயானல் அவர்கள் இவ்வுலகை விட்டு நீங்கியபின் நரகத்திற்குப் போய் நரக வேதனையை அடைவர் என்பது சாஸ்திரக்கூற்று. அப்படிப்பட்டவர்களுக்கு பிராயசித்த மென்பதே இவ்வுலகத்தில் கிடையாது.

நாம் தெரிசனம் செய்யப் போகும் ஆரம்பத்தில் நம்மை எதிர் கொண்டழைக்கும் அர்ச்சகர், அத்யயனபட்டர் முதலியோர் தூயமனதுடையவர்களாய் எப்பொழுதும் மந்திரத்தையே உச்சரித்துக் கொண்டிருப்பவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள்தான் கடவுளின் பிரதிநிதி என்று சொல்லப் பட்டிருக்கிறது பகவானின் திருநாமத்தைச் சொல்லி அர்ச்கர் அர்ச்சித்துக் கொண்டு வரும் பொழுது, நாம் வேறெங்கும் மனதை நாட விடாமல் அத்திரு நாமங்களை நம் காதில் கேட்டுகொண்டே வந்தால் இம்மையில் மோக்ஷம் கிட்டு மென்பது பெரியோர் வாக்கு. ஆனல் அர்ச்சனை செய்யும் அர்ச்சகர் ஆடிகாற்றில் தூசிபரப்பது போல் மந்திரங்களை தடலடியாய் அடித்துக்கொண்டு போகாமல், மெதுவாகவும், பக்கத்திலிருப்போருக்கு புரியும படியாக சாவதானமாகவும் சொல்லி உச்சரிக்க வேண்டும்: பின்னர் அர்ச்சனை முடிந்ததும் பகவானின் பிரசாதங்களாய் திகழும் விபூதி குங்குமாதிகளை பகவான் நாமத்தைச்சொல்லி நெற்றியில் அணிந்து கொண்டு மறுபடியும் சாஷ்டாங்க நவஸ்காரம் செய்து வெளியேறல் வேண்டும்.

இப்படிச் செய்தால்தான் விதிப்படி [illegible]வாலய தெரிசனம் செய்தவர் களா[illegible] இப்படி இல்லா விட்டால் நமக்கு [illegible] பலன் கிட்டாது. [illegible]ள்ளே போதற்கு யோக்[illegible] திருக்கோயிற் [illegible]ண [illegible]ணித் திருக் [illegible]ஸ்கரித்துக் கடவுளை மன[illegible]த்துக் கொண்டு போகலா[illegible]னபது முற்றும் அறிந்த பெரியோர்க[illegible]ன் வாக்கு.

துலாபுராண ப்ரவசனம்

கும்பகோணத்தில் ஸ்ரீ ஜகத்குரு காமகோடி பீடாதிபதி சங்கராசார்ய ஸ்வாமிகளின் அனுக்ரஹத்தை முன்னிட்டு பகவத்படித்துறையில், துலாமாசம் ஆரம்பமுதல்ப்ரம்மஸ்ரீவாஞ்ஞதுரை பாலகிருஷ்ண தீக்ஷிதரவர்களால் காலை 7-மணிமுதல் துலாபுராண ப்ரவசனம் வெகு ச்ராவ்யமாய் நடத்தப்பட்டு வந்து கார்த்திகை 2உ பானுவாரத்தில் காவேரி கல்யாண ப்ரவசனத்துடன் ஸமாப்தி செய்யப்படுட்ட டிை தீக்ஷிதரவர்கள் வேத சாஸ்திர ச்ரௌதா சாரங்களில் பிரஸித்தரானதால் டிை ப்ரவசனம் வெகுஆஸ்திகர்களால் ஆதரிக்கப்படுகிறது.

ஓர் ஆஸ்திகன்.

கோவிலூர் தார்மிக யுவக் சங்கம்

13-வது ஏகாதசி விழா

டிையூரில் மகாஜனங்களின் ஆதரவினுலும் ஒத்துழைப்பினுலும் ஏகாதசி விழாவானது வெகு விமரிசையாக வித்யாசாலையின் முன் கொட்டகையில் கொண்டாடப்பட்டது. அதுசமயம் அனேகம் பக்தகோடிகள் விஜயம் செய்திருந்தார்கள். பஜனை 8½ மணிக்கு ஆரம்பமாகி 12½ மணிக்கு முடிவடைந்தபிறகு தீபாராதனை முடிந்ததும் பக்தகோடிகளுக்கு ப்ரசாதம் வழங்கப்பட்டது. வி. ராமமூர்த்தி. கார்யதர்சி.

கீழப்பூங்குடி

ஸ்ரீ வர்ணாச்ரம ஸங்கம்
(சிவகங்கைக்கு ஸமீபம்)

டிை ஸங்கம் வழக்கம்போல் இந்த ஊரில் விளங்கா நின்ற ஸ்ரீ ருமமந்திரத்தில் பூர்ணிமையை முன்னிட்டு பிரம்மஸ்ரீ ப. சி. வை. த்யாகராஜ சாஸ்திரிகள் தலைமையில் 3 மணிக்கு மங்களகீதங்களோடு உபக்ரமமாயிற்று அநேகம் பண்டிதர்கள் சந்தியாவந்தனம், நமது கடமை, தர்ம ரஹஸ்யம், யுக ஸாமர்த்யம் முதலிய விஷயங்களையும் வெகு பிரமாணங்களுடன் கூடியிருந்த நூற்றுக்கணக்கானபுருஷர்கள் ஸ்திரீகள் யாவரும் வியந்து புகழும்படி பேருரையாற்றினர். பிறகு கார்யதர்சி ஸ்ரீகோவிந்தய்யங்கார் அவர்கள் இந்த ஸபையின் ஆரம்பமுதல் ஸனாதன தர்மம் தழைக்கச்செய்த உழைப்பையும் ஸபை மெம்பர்களின் ஆதரவையும் விரிவாகவும் அழகாகவும் சொல்லி இந்த ஸங்கத்திற்குக் காரணபூதர்களான நமது தலைவர் மதுரை ஸ்ரீ என். நடேசய்யர் அவர்களின் குணாதிசயங்களை உத்ஸாகத்துடன் வர்ணித்தார்கள் கரகோஷத்துடன் 6மணிக்கு பூர்த்தியானது

எஸ். கோவிந்தய்யங்கார்.

அஸ்ஸாமில் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க ஸ்தாபனம்.

ஹொஸூர் ஸ்ரீ. பி. எஸ். நாகராஜய்யா அவர்களின் முயற்சியால் 1940-ஹு அக்டோபர்-மீ 27.உ ஸிப்ஸாகர் நகரின் ஸனாதனதார்மிகர்களின் கூட்டமொன்று ஸ்ரீ ஐத் பணிபூஷன்பருவா அவர்களின் தலைமையில் அயோலபதி நம[illegible]தில் நடைபெற்றது.

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய [illegible] மெம்பர்களடங்கியதும் மேற்கொண்டு மெம்பர்களை சேர்க்கக்கூடியதுமான கிளை ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டது.

ஸ்ரீ ஜித் காளி பிரஸாத்கட்கி அக்ராஸனராகவும், ஸ்ரீ ஜிதமோபன் கிருஷ்ணபடுவர் கார்யதரிசியாகவும், தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மேற்கண்ட தீர்மானங்களின் நகல் ஒன்று அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க அக்ராஸனருக்கு அனுப்பப்படவும் தீர்மானிக்கப்பட்டது. (ந-நி)

வங்காளத்தில் ஹிந்துகளுக்கு அநீதி.

மாகாண அரசியலை ரத்து செய்ய வேணும்

வங்காளிகளின் கோரிக்கை

வங்க மாகாண ஹிந்து ஸபையின் ஆதரவில் நடந்த பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் தற்காலம் வங்கத்தில் நடந்து வரும் முஸ்லீம் ஆக்ஷியைப் பலமாகக் கண்டிக்கப்பட்டது. அந்த ஆக்ஷியில் ஹிந்து ஸமூஹத்தினருக்குப் பெரிய தீமைகள் செய்யப்பட்டுவருவதாயும், ஹிந்து ஸ்திரீகளின் நிலைமையானது இந்த முஸ்லீம் ஆக்ஷி காரணமாக அபாயமாயிருப்பதாயும் ஆதலால் மாகாண சர்க்கார்நிர்வாஹத்தை மந்திரிகளிடமிருந்து எடுத்துவிட்டு கவர்னரே நேரில் நடத்த வேணுமென்று வற்புறுத்திதீர்மானம் செய்யப்பட்டது.

215356

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்தியா மருந்து
இதுவே.
ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து
தேம்பல் படை, முதலிய வியாதிகளைத் தீர்க்கும்

[illegible] நெறிக்கழகம்
விழுப்புரம்.

ஓர் திருத்தம்.

[illegible] ரிடையட் ஐகோர்ட்டு அஸிஸ் [illegible]ண்ட் ரிஜிஸ்டிரார்ரும், விழுப்புரம், பெஞ்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்டு பிரஸிடெண்ட்டும், விழுப்புரம், கிளை தெய்வ நெறிக்கழக பிரஸிடெண்டுமான ஸ்ரீமான் வி. வெங்கட்டருமய்யர் பின்வருமாறு எழுதுகிறார்:—

தெய்வநெறிக்கழகத்தின் ஆதரவில் 1940 வருஷம் மே-மீ 4-உ சனிவாரம் ஷை கழக பிரஸிடெண்டின் வேண்டுகோள்படி சென்னை அட்வோகேட்டும் தர்மரக்ஷாமணியுமான ப்ரம்மஸ்ரீ கே. பாலசுப்ரமண்ய அய் [illegible]புரம் பிரஸங்கபானு, ப்ரம் [illegible] சாஸ்திரிகள், [illegible] [illegible]யார்களால் காலை 7மணிக்கு [illegible] பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது. இவ்வூரில் ஒரே பாடசாலை நடக்கிறது. ஷை பாடசாலை ஆரம்பிக்கும் பொருட்டு ஸ்ரீமுகம் அனுப்பும்படி ஷை கழக பிரஸிடெண்டு அவர்களின் வேண்டுகோளின் பேரில் கருணாமூர்த்தியாய் கைலாஸ நாதனது அவதாரமாய் விளங்கும் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்திலே 68வது பீடாதிபதிகளாக விளங்கும ஸ்ரீ சந்திர சேகர சரஸ்வதி ஸ்வாமிகள் ஓர் அற்புதமான ஸ்ரீமுகம் அனுக்கிரஹம் செய்துளளார்.

அந்த ஸ்ரீமுகத்தில் வெங்கட்ரமணய்யர்முதலியகிராமவாசிகளால் ஆரம்பிக்கப்படும் இந்தபாடசாலை நன்றாக நடக்க வேண்டுமென்று அருளியுள்ளார். அந்த ஸ்ரீமுகத்தைமடத்திலிருந்து நேராக வந்த சிஷ்யர் மேமீ 5உ இரவு அனுமார் கோவிலில் ஷை கழகத்தின் ஆதரவில் சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதரால் நடந்துவந்த ஸ்ரீமத்ராமாயண பக்ஷாஹகாலத்தில் சுமார் 3000ஜனங்கள் உள்ள கூட்டத்தில்வாசித்துஷை கழக பிரஸிடெண்டு V. வெங்கட்ரமணய்யர் இடம்கொடுத்தார் இது விஷயம் ஹிந்து, சுதேசமித்திரன், தினமணி, இந்தியன்எக்ஸ்பெரஸ், திவ்யஜீவியம், முதலிய பேபர்களில் வந்திருக்கிறது. நமது ஆர்யதர்மத்திலும் சென்னை வெ.சோமதேவ சர்மா அவர்களது வாரக்குறிப்பில் இவ்வூரில் ஷை கழக ஆதரவில் நடக்கும்வேத பாடசாலையைப் பற்றியும் எழுதியிருக்கிறார்.

இப்படி இருக்க ஷை பாடசாலைக்குத் தனியாக காரியதரிசி, கமிட்டி கிடையாது. நவம்பர்மீ 14உ பேபர்வேது பக்கம் 3வது பத்தியில் விழுப்புரம் வேதபாடசாலை என்பது சரியல்ல. ஷை பாடசாலைக்கு விரோதிகளான சிலபேர் தனியாக இதுபோல் பிரசுரம் செய்வதாகத் தெரிகிறது ஷை பாடசாலை தெய்வநெறிக் கழகத்தின்சார்பாகவே நடந்துவருகிறது.

ஷை பாடசாலை தெய்வநெறிக் கழகத்திற்கு கட்டுபட்டது அதை தனியாக பிரிப்பதற்கு கமிட்டி தவிற வேறு யாருக்கும் அதிகாரமில்லை என்பதையும் இதன் மூலம் தெரியப்படுத்துகிறேன்.

திப்புராஜபுரம்
ஸ்ரீ ப்ரும்ம வித்யாஸபா

ஷை ஸபாவின் ஆதரவில் அடி[illegible] படி உன்யாஸங்கள் நட[illegible]

12—10—40 சனிக்கி[illegible] குடி பிருப்[illegible] வைத்தினாத [illegible]ரிகள[illegible] வேதோக்த ப்ரகாரம் 19—[illegible] கிழமைதினம் திருவிசநல்லூர் [illegible] பிரும்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் ஹ[illegible] கலையும், அதுளப்படி லோகத்துக்குஅவர[illegible] களை சீர்தூக்கிக் கொள்ள உபயோகப்படுகிறது. 26—10—40 சனிக்கிழமை தினம், வரகூர் ப்ரும்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஈச்வராராதனமும் கோவில், அதின் ஆகமும் நாகசதுர்த்தி மஹிமை ஆன்னிகத்தில் சொல்லியபடிக்கு 27-10-40உ ஞாயிற்றுக்கிழமைதினம், ஷையார் பிம்ப ப்ரதிபிம்ப விவரணம். (ஏகாதசி) 2—11—40உ சனிக்கிழமைதினம் ஷையார் சந்தியாவந்தனம் மித்ரஸ்ய.

9-11-40உ சனிக்கிழமைதினம் உள்ளூர் ப்ரும்மஸ்ரீ நாராயண ச்ரௌதிகள் ஸத்யகாம ஜாபாலாக்யானம், ஸ்ரீமடம் வித்வான் பஞ்சாபகேச சாஸ்திரிகளின் மரணத்துக்கு அனுதாபத் தீர்மானம் 10-11-40உ ஏகாதசி ஷையார் சந்தோக்யத்திலுள்ள ஜ்யானச்ருதி ஆக்யானம்.'

தார்மிக யுவக்சங்கம்
ராமேச்வரம்

விக்ரம-ஸு அர்ப்பிசிமீ 25உ 10-11-40 ஏகாதசியன்று 2வது ஆண்டு 8வது ஏகாதசி விழாவில் பி. எம் சாஸ்திரி அவர்களால் கிருஷ்ண ஜனனம் என்ற ஓர் விஷயமாக உபந்நியஸிக்கப்பட்டது. முடிவில் உபந்நியாஸகர் ஸங்கமும் நமது நிலைமையும் என்று விஷயத்தைப்பற்றி நீண்டதோர் சொற்பொழி வாற்றினார்.

ந. கி

மதுரை தாம சாஸ்திர ஸபை

நாளது நவம்பர் மீ 23, 24உ களில் மதுரை தர்ம சாஸ்த்ர ஸபையின் 46வது வருஷோத்ஸவத்தை தமிழ்ச் சங்கம் ரோட் ஸ்ரீ ஸநாதன தர்ம வித்யாலயத்தில் பகவத் கிருபையை முன்னிட்டு நடத்தத் தீர்மானிக்கப்பெற்றிருக்கிறது. ஸ்ரீரங்கம் ஸ்ரீசங்கர குருகுல ஸ்தாபகர் ப்ருப்மஸ்ரீ குருபக்த சிகாமணி சாஸ்த்ர ப்ராசார பூஷண டி. கே. பாலஸுப்ரமண்ய அய்யரவர்கள் அக்ராஸனம் வஹிக்க அன்புடன் அங்கீகரித்திருக்கிறார்கள். விஷய ஸூசிகையில் கண்டபடி உபந்யாஸங்களும் ஸ்தோத்ரங்களும் நடைபெறும். ஆஸ்திகர்கள் யாவரும் விஜயம் செய்து பகவத் க்ருபைக்கும் ஆசார்யக்ருபைக்கும் பாத்ரர்களாகும்படி ப்ரார்த்திக்கப் படுகிறது.

ப்ரும்மஸ்ரீ சிவராம கிருஷ்ண சாஸ்த்ரிகளவர்களால் "தர்மசாஸ்த்ரங்கள் புராணங்கள்" முள்ளப்பள்ளி ப்ருப்மஸ்ரீ ட க்ஞதீக்ஷிதரவர்களால் "பக்தி" ப்ரப்மஸ்ரீ ஸாஹித்ய பூஷண வ்யாகரண ஸ்தாபக ஸத்கதாகண்டீரவ ஸம்ஸ்க்ருத ப்ரசார தூரீண க்ருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகளவர்களால் "பகவத் பாதாளின் பெருமை" கே. வி. ஸுப்ரமண்ய சாஸ்த்ரிகளவர்களால் "ஸதாசாரம்" ப்ரம்மஸ்ரீ எம். என். ஸுப்ரமண்ய சாஸ்த்ரிகளவர்களால் 'ஸநாதன தர்மம்' முதலியவைகளைப்பற்றி உபந்நியாஸங்கள் நடைபெறும்.

கார்யதர்சி

ஆத்ரேய ரஸாயனம்.

நாடி நரம்புகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். சரீரபுஷ்டியைச்செய்யும் அசதி களைப்புச் சோர்வுகளை உடனே நிவர்த்திசெய்யும். நல்ல பசி எடுக்கும். இழந்த பலத்தை திருப்பி அளிக்கும். உத்தம ரஸாயனம்.

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர்ரோடு, திருச்சினாப்பள்ளி

ஸ்தாபகர்:-
V. B. நடராஜசாஸ்திரீ,
ஆயுர்வேதாசார்ய (Regd)

Printed by S. Kalyansundarm, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopladesikachariar, and S. Kalyanasundaram.